

ஜூலை - ஆகஸ்
2007
தெளிவு
وَمَا عَلَيْنَا إِلَّا الْبَلَاغُ الْمُبِينُ
7
قُلْ هَٰذِهِ سَبِيلِي أَدْعُوا إِلَى اللَّهِ عَلَىٰ بَصِيرَةٍ أَنَا وَمَنِ اتَّبَعَنِي
وَأَنَّ هَٰذَا صِرَاطِي مُسْتَقِيمًا فَاتَّبِعُوهُ وَلَا تَتَّبِعُوا السُّبُلَ
فَتَفَرَّقَ بِكُمْ عَن سَبِيلِهِ
30/-
வெளியீடு : ஜமாஅதுல் முஸ்லிமீன்

# ஆசிரியர் கருத்து

நில நடுக்கங்களும், அழிவுகளும் அடிக்கடி நிகழக்கூடிய ஒன்றாக அமைந்து விட்ட இந்த காலத்தில் மனிதன் சற்று நின்று சிந்திக்கக் கூடிய மடமைப்பாடுடையவனாக இருக்கின்றான்.

சிந்தித்துப் பார்க்க வேண்டிய விடயங்கள் நிறைய இருப்பினும், இச்சந்தர்ப்பத்தில் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய விடயம் தான் என்ன? எக்கணப்பொழுதிலும் மரணம் வரும் என்று நம்பிக்கையுள்ள ஒருவன், ''தான் மரணிப்பதற்கு முன், தான் சரியான, நேரிய பாதையில் இருக்கின்றேனா'' என சிந்தித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரு ஊரிற்குப் பிரயானம் செய்வதென்றால், பர வழிகளின் பால் சென்று அவ்வூரை அடைந்துக் கொள்ளலாம். ஆனால் சுவர்க்கம் செல்வதற்கான வழி ஒன்று மாத்திரமே இருக்கின்றது. அவ்வழியை கண்டுபிடித்து அவ்வழியால் சென்றால் மாத்திரமே சுவனத்தை அடைந்துக் கொள்ளலாம்.

ஆனால் கைச்சேதம் என்னவென்றால் ''நாங்கள் சுவனத்திற்கு விகாட்டுகிறோம்'' என்று கூறிக்கொண்ட இஸ்லாத்தின் பெயரால் பிரிந்து கிடக்கின்ற ஒவ்வொரு இயக்கங்களும் மக்களை தங்கள் இயக்கங்களின்பால் அழைத்துக் கொண்டும் மற்றைய இயக்கங்களச் சாடிக்கொண்டும் இருக்கின்றனர். வெறுமனே மக்களை தங்கள் இயக்கங்ளில் இணைத்துக் கொள்வதற்காக தவரான கொள்கையையும்,

சித்தாந்தங்களையும் கூறுகின்றனரே தவிர, ‘‘தாங்கள் தான் சுவனம் செல்லக் கூடிய ஜமாஅத்’’ என்று துணிந்து கூற முற்படுவதில்லை.

இத்தருணத்தில்தான் ஒரு பகுத்தறிவுள்ள மனிதன் செய்ய வேண்டிய கடமை என்னவெனில், எல்லாப் பிரிவுகளையும் விட்டு ஒதுங்கி, ‘‘சுவனம் செல்லக்கூடிய ஜமாஅத் எது?’’ என்பதை அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவை ஆதாரமாக வைத்து ஆராய்ந்து, சிந்தித்து பார்க்க வேண்டும்.

அசுர வேகத்தில் காலம் சுழன்று கொண்டிருக்கின்றது. அதற்கு ஈடுகொடுத்து மனிதனும் தனது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேகமாக முயன்று கொண்டிருக்கின்றானே தவிர, மார்க்க விடயத்தில் சரியான பாதையை தேடிக் கண்டுபிடிக்க எவ்வித முயற்சியும் செய்வதில்லை.

ஒரு சிலரோ, ‘‘இப்படி பல இயக்கங்களாகப் பிரிந்து கிடக்கின்ற காலத்தில் நேரிய பாதையை கண்டுபிடிப்பது எங்களுக்கு மிகவும் குழப்பமாக உள்ளது.’’ என்று கூறி தப்பித்துக் கொள்ளப் பார்க்கின்றனர். ஆனால் அல்லாஹ்வோ மனிதனை குழப்பத்தில் ஆழ்த்தவில்லை. அல்லாஹ் இவ்வுலகில் மனிதனை குழப்பத்தில் மூழ்கடிக்கச் செய்துவிட்டு, மறுமையில் அவனை தண்டிக்கக் கூடிய அநியாயக்காரனும் அல்ல. அவன் கலங்கமற்ற தனது தீனை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளான். இதனை அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு கூறுகின்றான்.

‘‘தெளிவாக எடுத்துச் சொல்வதை தவிர (வேறு எதுவும்) எம்மீது கடமையில்லை’’ (ஸூரா யாஸீன் : 17)

நபி (ஸல்) அவர்களும் ''நான் உங்களை வெள்ளை வெளேரென்ற, இரவும் பகலை போன்ற பாதையில் விட்டுச் செல்கின்றான்'' என்று கூறியுள்ளார்கள்.

எனவே மார்க்கம் தெளிவானது. அந்த சுவனப்பாதையைக் கண்டுபிடிக்க ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ்வின் உதவியால் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா ஒளியில் அந்த சுவனப்பாதை எது என்பதை மக்களுக்கு தெளிவு படுத்துவதே ''தெளிவு'' எனும் இச்சஞ்சிகையின் பிரதான நோக்கமாகும்.

எனவே வாசகர்களாகிய நீங்கள் ''தெளிவு'' எனும் இச்சஞ்சிகையைத் தொடர்ந்து படிப்பதன் மூலம், குழப்பமற்ற தெளிவான மார்க்கத்தை விளங்கிக் கொள்ளலாம். இச்சந்தர்ப்பதத்தில் உங்களுக்கு எழும் சந்தேகங்களை அவ்வப்பொழுது எங்களுடன் தொடர்பு கொண்டு தீர்த்துக் கொள்வதன் மூலம் உயரிய சுவனபபாதையை அடைந்து நேர்வழிப் பெற முயற்சிக்கவும்.

அன்புடன்

-ஆசிரியர்-

# கேள்வி – பதில்

## ஜனாஸாவுக்கு பிரார்த்தனை

கேள்வி : 01 அதிகமான இடங்களில் ஜனாஸாத் தொழுகை நடாத்தும் போது மூன்றாவது தக்பீருக்குப்பின் பிரார்த்தனை செய்வார்கள். அதை அமைதியாகவே ஓதுவார்கள். ஆனால் சமீபத்தில் நான் ஒரு ஜனாஸாத் தொழுகையில் கலந்து கொண்ட போது அதில் இமாம் சப்தமிட்டு மையித்துக்காக பிரார்த்தனை செய்தார். இது எனக்குப் புதிதாக இருப்பதால் சரியான நபிவழி என்ன? என்பதை தெளிவுபடுத்துமாறு வேண்டுகிறேன்.

பதில் : நபி (ஸல்) அவர்களின் ஸுன்னாக்கள் குழி தோண்டிப் புதைக்கப் பட்டு விட்டன. அவைகளில் ஒன்றுதான் ஜனாஸாவுக்கு சப்தமிட்டுப் பிரார்த்தனை செய்வது.

நபி (ஸல்) அவர்கள் சப்தமிட்டே துஆச் செய்திருக்கிறார்கள். அமைதியாக ஓதியதற்கு ஆதாரமில்லை. சப்தமிட்டு ஓதியதற்கே பின்வரும் ஆதாரங்கள் அமைந்துள்ளன.

அவ்ப் பின் மாலிக் கூறுகிறார்கள், “நபி (ஸல்) அவர்கள் ஒரு ஜனாஸாவுக்கு தொழுகை நடாத்தினார்கள். அதில் அவர்கள் ஓதிய துஆவை நான் மனனமிட்டுக் கொண்டேன்.” என்று கூறினார்கள்.

(முஸ்லிம், நஸாஈ, இப்னுமாஜா)

அமைதியாக ஓதியிருந்தால் இந்த நபித் தோழரால் எப்படி மனனம் செய்ய முடியும்? சப்தமிடக் கூடாது அமைதியாகவே பிரார்த்திக்க

வேண்டும் என்பவர்கள் ஹதீஸுக்கு மாற்று விளக்கம் கொடுத்து“நான் மனனம் செய்தேன்”என்ற வாசகத்துக்கு, “தொழுகை முடிந்து எனக்குக் கற்றுத் தந்தார்கள் நான் மனனமிட்டேன்.” என்று தர்க்கம் செய்வார்கள். இதற்கு எந்த ஆதாரமும் இல்லை. ஸஹீஹ் முஸ்லிமில் வந்துள்ள வாசகம் பின்வருமாறு:

“நபி (ஸல்) அவர்கள் ஒரு ஜனாஸாவுக்கு தொழுகை நடாத்தினார்கள்அவர்களின் பிரார்த்தனையிலிருந்து நான் மனனமிட்டேன்.”

(முஸ்லிம் - எண் : 2229)

இதில் ‘தொழுகை முடிந்து கற்றுக் கொடுத்தார்கள்’ என்ற வாசகம் இல்லை. எனவே நபிவழி என்னவெனில் ஜனாஸாத் தொழுகையில் மூன்றாவது தக்பீருக்குப் பின் இமாம் சப்தமிட்டு பிரார்த்திக்க வேண்டும்.

மற்றுமொரு அறிவிப்பில் “முஸ்லிம்களில் ஒருவருக்கு நபிந அவர்கள் ஜனாஸாத் தொழுகை நடாத்தினார்கள். அதில் துஆவை செவியுறச் செய்தார்கள்.” என்று வாதிலா பின் அஸ்கப் கூறுகிறார் கள். (அபூதாவூத், இப்னுமாஜா)

## குழந்தைகளுக்குப் பெயர் சூட்டுதல்

கேள்வி : 02 குழந்தைகளுக்கு நாம் விரும்பிய பெயர்களை சூட்டலாமா அல்லது இஸ்லாத்தில் ஏதும் தடைகள் இருக்கின் றனவா?

பதில் : பிள்ளைகளுக்கு பெயர் சூட்டும் விடயத்தில் இஸ்லாம் கூறும் போதனைகள் முதுகுக்குப் பின்னால் தள்ளப்பட்டு தாங்கள் விரும்பியவாறு மக்கள் நடப்பதை நாம் காண்கின்றோம். “பிள்ளைகளுக்கு அழகான பெயர்களை சூட்டுங்கள்” என்று இஸ்லாம் கூறுகின்றது. இந்த ஹதீஸை கண்டும் காணாதது போல தங்கள் பிள்ளைகளுக்கு புகுல் - கஞ்சன், பாஸித் - கெட்டவன் நிபாஸ் - கெட்ட இரத்தம், ஆஸியா - பாவி போன்ற மோசமான பெயர்களைச் சூட்டுவதையும், ஆணின் பெயரான ‘ஹம்ஸா’ என்பதை பெண்களுக்கும், ‘ஹனீபா’ என்ற பெண்ணின் பெயரை ஆண்களுக்கும் சூட்டுவதையும் இன்று நாம் காண்கின்றோம்.

பிள்ளைகளுக்கு நல்ல பெயர்களை வைக்குமாறு இஸ்லாம் வலியுறுத்துகிறது.

“உங்கள் பெயர்களை அழகாக வையுங்கள்” (அபூதாவூத்)

இஸ்லாத்தில் தடுக்கப்பட்ட பெயர்களும் இருக்கின்றன. அவை பின்வருமாறு:

ஹராம் - حرام ஹரப் - حرب அஸீஸ் - عزيز

ஹஸ்ன் - حزن ஷிஹாப் - شهاب குராப் - غراب

யஸார் - يَسَار ரபாஹ் -رباح நஜீஹ் - نجيح

அப்லஹ் - أفلح நாபிஃ - نافع ஹகம் - حكم

அஸ்வத் - أسود கதீர் - كثير அசரம் - أصرم

பிர்ரஃ - برَّه ஆசியா - عاصية அப்து அம்ர்

அப்துர்ரஸூல் - عبد الرسول அப்துல் மனாப் - عبد المناف

அப்துல் ஹுஸைன் - عبد الحسين அப்துல் முத்தலிப் - عبد المطلب

(ஸஹீஹ் முஸ்லிம், ஸஹீஹுல் புகாரி,
அஹமத், ஹாகிம், அபூதாவூத், தபரானி)

மற்றுமொரு அறிவிப்பில் "அபுல் காஸிம் எனும் பெயரைச் சூட்டாதீர்கள்" என்று வந்துள்ளது.

"என் பெயரை (முஹம்மத், அஹமத், ஹாமி, ஹாஸிர்) சூட்டுங்கள். என் புணைப் பெயரை (அபுல் காஸிம்) சூட்டாதீர்கள்." என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(புஹாரி, முஸ்லிம்)

ஸம்ஸம் தண்ணீர்

கேள்வி : 03 ஹஜ் உம்ராவுக்கு செல்பவர்கள் ஸம்ஸம் தண்ணீரை குடிக்கும் போது நின்ற வண்ணம் குடிக்கின்றனர். இது ஸுன்னத் என்றும் கூறுகின்றனர். உடம்பில் அதை ஊற்றிக் கொள்கின்றனர். அதை தங்கள் வீடுகளுக்கும் எடுத்துச் செல்கின்றனர். இவைகளுக்கு இஸ்லாத்தில் ஆதாரங்கள் இருக்கின்றனவா? அல்லது மார்க்கத்திற்கு முரணானவைகளை செய்கின்றனரா? இதை தெளிவு படுத்தவும்.

பதில் : ஸம்ஸம் தண்ணீரை நோய்களுக்காக அருந்தலாம். அதில் சுகம் இருக்கிறது.

"ஸம்ஸம் தண்ணீர் எந்த எண்ணத்தில் அருந்தப் படுகின்றதோ அது நிறைவேறும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(தபரானி-மனாஸிருல் ஹஜ், அல்பானி பக்கம் :23)

ஸம்ஸம் தண்ணீரை தங்கள் வீடுகளுக்கு எடுத்துச் செல்லலாம்.

"நிச்சயமாக நபி (ஸல்) அவர்கள் அதை (ஸம்ஸம் தண்ணீரை) எடுத்துச் செல்பவராக இருந்தார்கள்.

(திர்மிதி. ஸஹீஹ் நயிலுல் அவ்தார் 5 : 74)

ஸம்ஸம் தண்ணீரை குடிக்கலாம் தங்கள் தலையில் ஊற்றிக் கொள்ளலாம்.

“பிறகு நபி (ஸல்) அவர்கள் ஸம்ஸம் தண்ணீரை நோக்கிச் சென்று அதை குடித்து, தங்கள் தலையிலும் ஊற்றிக் கொண்டார்கள்.”

(அஹமத். தரம் - ஜய்யித்)

குறிப்பு : நபி (ஸல்) அவர்கள் நின்ற வண்ணம் ஸம்ஸம் தண்ணீரை குடித்தார்கள் என்பது தவறான வாதமாகும். ஏனெனில் நின்ற வண்ணம் குடிப்பதை நபி (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள். ஏனைய வஸ்துக்களை உட்கார்ந்து குடிப்பது போல் ஸம்ஸம் நீரையும் உட்கார்ந்தே குடிக்க வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் ஒட்டகத்தில் அமர்ந்தவாறு அந்நீரைக் குடித்தார்கள். ஒட்டகம் தான் நின்று கொண்டிருந்தது. என அறிவிப்பாளர் சத்தியம் செய்து கூறுகின்றார்.

நின்ற வண்ணம் குடிப்பதை தடுத்த நபி (ஸல்) அவர்கள் எப்படி தடைக்கு முறணாக நடப்பார்கள்?

“எதை விட்டும் நான் உங்களை தடுக்கின்றேனே அதைச் செய்து உங்களுக்கு மாற்றமாக நடக்க நான் விரும்பவில்லை.”என்று அல்குர்ஆன் கூறுகிறது. (11:88)

ஆகவே நபி (ஸல்) அவர்கள் நின்ற வண்ண குடித்து மாற்றம் செய்ய மாட்டார்கள்.

இதே போன்று ஸம்ஸம் தண்ணீர் அருந்தும் போது தலையை திறந்த வண்ணம் வைக்க வேண்டும் என்பதும் ஆதாரமற்ற வாதமாகும். நபி (ஸல்) அவர்கள் அப்படி தலையை திறந்த வண்ணம் குடித்தார்களே

என்று ஒருவர் வாதித்தால் அவரகள் இஹ்ராம் அணிந்த நிலையில் இருந்தார்கள். அப்போது தலை திறந்தே இருக்கும் என்பது பதிலாகும்.

## தனிமையிலிருத்தல்

கேள்வி : 04 அதிகமானவர்கள் தங்கள் வீடுகளிலும் கடைகளிலும் தோட்டங்களிலும் வேலைத் தளங்களில், பள்ளிவாயில்களில் காவல் வேலை செய்வதற்காகவும் தனியாக தங்குகிறார்கள். இது சம்பந்தமாக இஸ்லாம் என்ன கூறுகிறது?

இக்கேள்வி கேட்கக் காரணம் சிலர் தனியே தங்கி திடீரென மரணித்து விடுபவர்களும் உண்டு. இவர்களின் மரணம் சில நாட்கள் சென்ற பின்பே தெரிய வருகிறது. ஆகவே இஸ்லாம் இப்படித் தனியே தங்குவதை தடை செய்கின்றதா? என்பதாகும்.

பதில் : இஸ்லாம் ஒரு பூரண வாழ்க்கைத் திட்டமாகும். எல்லாத் துறையிலும் இஸ்லாம் வழி காட்டகிறது. எங்கு நன்மை இருக்கின்றதோ அதை சொல்லித் தரும். எங்கு தீமை இருக்கின்றதோ அதைத் தடுக்கும். இந்த அடிப்படையில் ஒருவர் வீட்டில் இரவில் தனியே தங்குவதை இஸ்லாம் தடுக்கின்றது.

“ஒரு மனிதர் தனியே வீட்டில் இரவில் தங்குவதையும் தனியே பிரயாணம் செய்வதையும் நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள்.”
(அல் அஹாதீதுஸ் ஸஹீஹா எண் 60, அஹமத்)

மற்றுமொரு அறிவிப்பில் “தனிமையின் கெடுதியை ஒருவர் அறிவாரேயானால் அவர் வீட்டில் தனியே தூங்க மாட்டார்.” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(தபரானி அல் அவ்ஸத், அல் அஹாதீதுஸ் ஸஹீஹா, பக்கம் 91)

## சுவனத்தில் மரம் நடுதல்

கேள்வி : 05 ஒருவர் “ஸுப்ஹானல்லாஹ்” என்று ஒரு முறை கூறினால் அவருக்காக ஒரு மரம் சுவனத்தில் நாட்டப்படும். என்று சில அமைப்புகள் மக்களை தூண்டுகின்றனர். இன்னும் சில அமைப்புகள் இதை எதிர்த்து அப்படி ஒரு ஹதீஸ் கிடையாது. அப்படியானால் சுவனத்தில் அதிகமாக மரங்களாகி விடுமே? என்று வாதிக்கின்றனர். இதன் உண்மை யாது? இதற்கு ஆதாரம் இருக்கின்றதா? இல்லையா? என்பதை மிகத் தெளிவாக விளக்கவும்.

பதில் : மார்க்க விடயத்தில் குர்ஆன், ஹதீஸோடு அறிவை முட்ட விடக் கூடாது. ஒரு ஹதீஸ் ஸஹீஹானதாக எமக்குக் கிடைத்தால் அது எங்கள் அறிவுக்குப் படாதவையாக இருந்தாலும் அதை மறுக்காது ஏற்றுக் கொள்ள வேண்டும். அறிவைப் பயன்படுத்த முற்பட்டால் அதிகமான குர்ஆன் வசனங்களையும் ஸஹீஹான ஹதீஸ்களையும் நிராகரிக்க வேண்டி வரும்.

“ஸுப்ஹானல்லாஹ்” என்று கூறினால் அதற்கு சுவனத்தில் ஒரு மரம் நாட்டப்படும் என்ற ஹதீஸ் ஸஹீஹாக எமக்குக் கிடைத்து விட்டால் எமது அறிவைப் பயன் படுத்தி, “சுவனத்தில் இடம் இல்லாமல் போய் விடுமே” என்று கேள்வி கேட்கக் கூடாது. அத்தோடு யார்

சொன்னாலும் அது அல்லாஹ்வின் வஹியாக இருந்தால் அதை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் எமக்கு வர வேண்டும். இந்த விடயத்தில் வந்துள்ள ஹதீஸ் ஸஹீஹானதே.

"நபி (ஸல்) அவர்கள் 'ஸுப்ஹானல்லாஹில் அழீம் வபிஹம்தி ஹி' (மகத்துவமிக்க அல்லாஹ்வை துதி செய்கின்றேன்.) என்று யார் கூறுகின்றாரோ, அவன் புகழைக் கொண்டு அவருக்காக சுவனத்தில் ஒரு ஈத்த மரம் நாட்டப்படும்." என்று கூறியதாக ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

(இப்னு அபீ ஷைபா, ஹாகிம், இப்னு ஹிப்பான், திர்மிதி)

திர்மிதி கூறுகிறார், இது ஸஹீஹ் ஹஸன் தரத்திலுள்ளது. இமாம் ஹாகிம் கூறுகிறார், இது முஸ்லிம் இமாமின் நிபந்தனைக்கு உட்பட்டது.இமாம் தஹபியும் இதற்கு உடன்பட்டுள்ளார். இதற்கு அஹ்மதில் ஷாஹிதும் உள்ளது.

இந்த ஹதீஸ் ஸஹீஹானது என்று நிரூபனமாகியுள்ளதால் ஒரு முஸ்லிம் முடியுமான வரை இந்த தஸ்பீஹை செய்து வரலாம். இதை வுழூச் செய்து பள்ளியில் செய்ய வேண்டுமென்பதில்லை. பாதையில் நடக்கும் போதும் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதும் தூங்கும் போதும் நினைத்த நேரங்களில் செய்து கொள்ளலாம்.

**கேள்வி : 06** ஒரு பிரயாணிக்கு தூய்மையான இடம் கிடைக்கவில்லையெனில் தொழுகையை விடுவதா? அல்லது பூமியில் எந்த இடத்திலும் தொழலாமா? தடை செய்யப்பட்ட இடங்களும் இருக்கின்றனவா?

பதில் : ஒருவருக்கு தொழுகை நேரம் வந்து விட்டால் பூமியில் எந்த இடத்திலும் தொழலாம். ஏழு இடங்களைத் தவிர இந்த இடங்களில் தொழுவது தடை செய்யப்பட்டுள்ளது.

“ஏழு இடங்களில் தொழுவதை நபி (ஸல்) அவர்கள் தடை செய்ததாக இப்னு உமர் கூறுகிறார்கள் :

1. குப்பை 2. கால் நடைகள் அறுக்கும் இடம்

3. மண்ணறை 4. நடை பாதை

5. குளியலறை 6. ஒட்டகப் பண்ணை

7. உயர்வான அல்லாஹ்வின் வீட்டிற்கு (க.ஃ.பா) மேல்

(திர்மிதி. இது ஸஹீஹ் என்று இமாம் இப்னுஸ்ஸகனும் இமாமுல் ஹரமைனும் கூறுகிறார்கள். தவ்லீனுல் அஹ்காம் 2:455 இமாம் இப்னு ஹஜரும் தல்கீஸ் என்ற நூலில் இதை ஸஹீஹ் என்கிறார்.)

கேள்வி : 07 தொழும் போது ஆண்களோ பெண்களோ சிறு குழந்தைகள் அழுதால் அவர்களை சுமந்த வண்ணம் தொழலாமா? சிலர், “அது ஸுன்னத்தான தொழுகையில்தான் கூடும், பர்ழில் கூடாது.” என்கின்றனர். இதன் சரியான விளக்கம் என்னவென்று தெளிவு படுத்தவும்.

பதில் : ஒருவர் தொழும் போது சிறு குழந்தைகள் அழுதால் அவர்களை தூக்கி சுமந்த வண்ணம் தொழலாம். அது எந்தத் தொழுகையாக இருந்தாலும் சரியே. சிலர் இது பர்ழில் கூடாது, நப்லில் மட்டுமே கூடும் என்கின்றனர். இந்தக் கருத்து ஸஹீஹான ஹதீஸ்களுக்கு மாற்றமானது.

“நாங்கள் நபி (ஸல்) அவர்களை அஸர் அல்லது ளுஹர் தொழுகைக்கு எதிர்பார்த்திருந்தோம். உமாமா என்ற பிள்ளை, அவர்களின் கழுத்தில் இருக்க இமாமத் செய்தார்கள்.” என்று ஸஹீஹ் முஸ்லிமில் வந்துள்ளது.

எனவே தொழும் போது குழந்தைகள் அழுதால் தூக்கி வைத்துக் கொண்டு தொழலாம். ருகூ.். செய்யும் போது கீழே வைக்க வேண்டும். மீண்டும் இரண்டாவது ரக்அத்துக்கு எழும்போது தூக்கிக் கொள்ளலாம்.

“நபி (ஸல்) அவர்கள் தொழும் போது ஸய்னப் அவர்களின் மகள் உமாமாவை சுமந்திருப்பார்கள். ருகூஉ செய்யும் போது அவர்களை (கீழே) வைத்து விடுவார்கள். எழும் போது சுமந்து கொள்வார்கள்.”

(ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

முஸ்லிமில் மற்றுமொரு அறிவிப்பில் :

“அவர்கள் பள்ளியில் இமாமத் செய்யும் போது” என்று வந்துள்ளது.

கேள்வி 08 : ஒரு நோயாளிக்கு இரத்தம் தேவைப் படுகிறது தனது இரத்தத்தை அவருக்காகக் கொடுத்து அதற்குப் பணம் பெறுவது கூடுமா? விளக்கவும்.

பதில் : இரத்தம் கொடுப்பது பற்றி ஏதும் தடை வரவில்லை. ஆனால் அதைக் கொடுத்து அதற்காகப் பணம் பெறுவது தடுக்கப்பட்டுள்ளது.

“இரத்தத்திற்கு பெறுமதி எடுப்பதை நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள்.” (ஸஹீஹுல் புஹாரி)

கேள்வி 09 : ஒருவர் உணவு அருந்தும் போது சாய்ந்த வண்ணம் சாப்பிடுவது கூடாது என்கின்றனர். இது சம்பந்தமாக இஸ்லாம் தடை விதித்துள்ளதா?

பதில் : உணவு அருந்தும் போது நின்ற வண்ணம் சாப்பிடுவதை நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள். இதே போன்று சாய்ந்த வண்ணம் சாப்பிடுவதை தடுக்கவில்லை. ஆனால், “நான் சாய்ந்த வண்ணம் சாப்பிட மாட்டேன்.” என்று கூறினார்கள்.

அல்குர்ஆனில், “அல்லாஹ்வையும் மறுமையையும் பயந்து அல்லாஹ்வை அதிகம் அதிகமாக ஞாபகம் (திக்ர்) செய்பவர்களுக்கு நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரில் அழகிய முன்மாதிரி இருக்கிறது.” என்று அல்லாஹ் கூறுகிறான். (33:21)

அல்லாஹ்வின் தூதரை எங்களுக்கு முன்மாதிரியானவர்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். ஒருவர் மற்றவருக்கு பல கட்டளை களை இடுகிறார். இவரும் அதற்குக் கட்டுப்படுகிறார். இப்போது கட்டளையிட்டவரின் முன்மாதிரியை இவர் பின்பற்றுகிறார் என்று சொல்லப்பட மாட்டாது.

மாறாக ஒருவரின் சொந்த செயல்களைப் பார்த்து அதைப் பின்பற்றுவதற்கே முன்மாதிரி என்று கூறப்படும். இந்த அடிப்படை யில் நபி (ஸல்) அவர்கள் எப்படி சாப்பிட்டார்கள்? எப்படி உட்கார்ந் தார்கள்? எப்படித் தூங்கினார்கள்? என்ற செயல்களைப் பார்த்து அதைப் பின்பற்றும் போது அது ஒரு முன்மாதிரியாக இவருக்கு அமையும்.

நபி இப்றாஹீம் (அலை) அவர்களும் அவர்களோடிருந்த முஸ்லிம்களும் இணை வைப்போர்களிலிருந்து விலகிக் கொண்டார்கள். இதனை அல்லாஹ் :

"நிச்சயமாக இப்றாஹீமிடமும் அவரோடிருந்தவர்களிடமும் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கின்றது."என்று கூறுகிறான். (60:04)

ஆகவே சாய்ந்த வண்ணம் சாப்பிடுவது குற்றமா? தண்டனை கிடைக்குமா? என்றெல்லாம் வீண் விவாதங்கள் புரியாது, அல்லாஹ்வையும் மறுமையையும் பயப்படக்கூடியவர்கள் நபி ந அவர்கள் சாயாது சாப்பிட்டது போல் சாப்பிடுவார்கள். அவர்களின் முன்மாதிரியை எடுத்துக் கொள்வார்கள்.

ஒரு முஸ்லிம் எப்போதுமே 33:21 இல் அல்லாஹ் கூறியது போன்று தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள பேராசைக் கொண்டவராக இருக்க வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் கூறியது போன்று "நான் சாய்ந்த வண்ணம் சாப்பிட மாட்டேன்." என்று கூறி அதே பிரகாரம் அமல் செய்ய அல்லாஹ் எமக்கு தௌபீக் செய்வானாக!

கேள்வி 10 : குளியல் அறை சுற்றிவர மறைக்கப்பட்டுள்ளது. அதில் ஒருவர் குளிக்கும் போது நிர்வாணமாக குளிக்கலாமா? அல்லது தன்னை ஆடையால் மறைத்துத்தான் குளிக்க வேண்டுமா?

பதில் : குளிப்பவர் குளியலறைக்குள் இருந்தாலும் தன்னை மறைத்துக் கொள்ள வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளதால், மறைத்துக் கொள்வது கடமையாகும்.

குளியலறை என்ற இடத்தை (வீட்டை) பயந்து கொள்ளுங்கள். அதில் நீங்கள் நுழைந்தால், மறைத்துக் கொள்ளவும்.

( அல்ஜாமிஉஸ் ஸகீர் - எண் : 116, தபரானி, இப்னு ஹிப்பான், அல்இர்வா∴. - 8 : 204)

மற்றுமொரு அறிவிப்பில் :

உங்களில் ஒருவர் குளித்தால் மறைத்துக் கொள்ளட்டும்.

(அபூதாவூத், நஸாஈ, அஹ்மது, மிஷ்காத் - பா:01, பக்கம் : 139)

கேள்வி 11 : ஒருவர் ஜமாஅத்தோடு தொழுது கொண்டிருக்கும் போது வுழூ முறிந்து விட்டால் அவர் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

தொடர்ந்து ஜமாஅத்தோடு தொழுது விட்டு, பிறகு வுழூச் செய்து கலாச் செய்ய வேண்டுமா? அல்லது தொழுகையை விட்டு விட்டு வெளியில் சென்று வுழூச் செய்து கொண்டு மீண்டும் ஜமாஅத்துடன் சேர்ந்து கொள்ள வேண்டுமா?

பதில் : தொழுகையிலிருக்கும் போது அவருக்கு வுழூ முறிந்து விட்டால் தொடர்ந்து வுழூவின்றி தொழக் கூடாது. மாறாக, தனது மூக்கைப் பிடித்தவாரு வெளியேறி மீண்டும் வுழூச் செய்து கொண்டு தொழுகையை மீட்ட வேண்டும்.

"உங்களில் ஒருவருக்கு தொழுகையில் வுழூ முறிந்து விட்டால் தன் மூக்கைப் பிடித்தவாறு வெளியேறி விடவும்."என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.

(அல்ஜாமிஉஸ் ஸகீர் - எண்:286, மிஷ்காத் : 1007 - ஸஹீஹ்)

# அதானும் இகாமத்தும்

**தொழுகை - தொடர் : 06**

13. இகாமத்திற்கு பதில் கூறுவது எந்த ஹதீஸிலும் கிடையாது.

"கத்காமதிஸ் ஸலாத்" என்பதற்குப் பதிலாக

"அகாமஹுல்லாஹு வஅதாமஹா" என்று கூறுவது ஸஹீஹான ஹதீஸ்களில் இடம் பெறவில்லை. ("அகாமஹுல்லாஹு வஅதாமஹா" என்று கூற வேண்டுமென வரக்கூடிய அறிவிப்பில் இனந் தெரியாத ஓர் அறிவிப்பாளர் இருக்கின்றார்.)

14. "அஸ்ஸலாத்து ஹைரும் மினன்னவ்ம்" என்பதற்குப் பதில் கூறுமுகமாக "ஸதக்த வபரிர்த வபில்ஹக்கி நதக்த" என்று கூறுவது முற்றிலும் ஆதாரமற்றதாகும்.

15. மலைகளிலும் காடுகளிலும் தொழுகைக்காக அதான் கூறப்பட வேண்டும்.

"மலையின் உச்சிப் பகுதியிலே ஆடுகளை வைத்துக் கொண்டிருக்கும் இடையன் தொழுகைக்காக அதான் கூறித் தொழுவதைக் கண்டு உமது ரப்பு மகிழ்ச்சிய டைகின்றான்." ( நஸாஈ - ஸஹீஹ், த∴.லீகாத் )

16. பிரயாணத்திலும் அதானும் இகாமத்தும் கூறப்பட வேண்டும்.

"நீங்கள் இருவர் பிரயாணம் செய்தால் அதான் கூறி, இகாமத் கூறி, உங்களிலே பெரியவர் உங்களுக்கு தொழுகை நடாத்தட்டும்."

(ஸஹீஹுல் புஹாரி)

17. (பிரயாணத்தில்) தொழுகையின் நேரம் சென்று விடுமேயானால் அதான் இகாமத் கூறி அதனை நிறைவேற்றவும்.

“சூரியன் உதித்திருக்கும் நிலையில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தூக்கத்திலிருந்து எழுந்தார்கள். “பிலாலே... எழுந்து அதான் கூறும்.” எனக் கூறினார்கள்.”

(ஸஹீஹுல் புஹாரி)

“பிலால் (ரலி) அவர்கள் அதான் கூறினார்கள்”

(ஸஹீஹ் முஸ்லிம்)

“பிலாலுக்குக் கட்டளையிட்டார்கள். அவர்கள் இகாமத் கூறினார்கள்.” (ஸஹீஹ் முஸ்லிம்)

18. அதானுக்கும், இகாமத்திற்குமிடையில் துஆ ஏற்றுக் கொள்ளப் படுகின்றது.

“அதானுக்கும் இகாமத்திற்குமிடையில் கேட்கப் படும் துஆ மறுக்கப்பட மாட்டாது. ”

( அஹ்மது. அபூதாவூத், திர்மிதி - ஸஹீஹ், அத்த.ீலீகாத் )

19. ம.்.ரிபுடைய அதானின் போது பின்வரும் துஆவை ஓதிக் கொள்ள வேண்டும்.

**அல்லாஹும்ம இன்ன ஹாதா இக்பாலு லைலிக வஇத்பாரு நஹாரிக வஅஸ்வாது துஆதிக ப.்.பிர்லீ.**

பொருள் :யா அல்லாஹ்! இது நிச்சயமாக உனது இரவின் வருகையாகும். உனது பகலின் மறைவாகும். உனது அழைப்பாளர்களின் ஓசையாகும். எனவே என்னை மன்னித்தருள்வாயாக!

"ம.்.ரிபுடைய அதானின் போது "அல்லாஹும்ம இன்ன ஹாதா..." என்ற துஆவை ஓதும்படி அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எனக்குக் கற்றுத் தந்தார்கள்." என அன்னை உம்மு ஸலமா றழியல்லாஹு அன்ஹா அவர்கள கூறுகின்றார்கள்.

(அபூதாவூத் - ஹஸன், ஹாகிம், தஹபி இதனை சரி கண்டுள்ளார்.)

20. நேரம் வருவதற்கு முன் அதான் கூறி விட்டால் "அலா இன்னல் அப்த நாம, அலா இன்னல் அப்த நாம" என்று அறிவிக்க வேண்டும். தெரிந்து கொள்ளுங்கள் அடியானிடமிருந்து ஒரு கவனயீனம், தெரிந்து கொள்ளுங்கள் அடியானிடமிருந்து ஒரு கவனயீனம் ஏற்பட்டிருக்கின்றது.

"நிச்சயமாக பிலால் (ரலி) அவர்கள் பஜ்ர் உதயமாவதற்கு முன்னர் அதான் கூறி விட்டார்கள். உடனே அல்லாஹ்வின் தூதர் (ஸல்)

அவர்கள் திரும்பிச் சென்று அலா இன்னல் அப்த நாம, அலா இன்னல் அப்த நாம "அறிந்து கொள்ளுங்கள் அடியான் தூங்கிவிட்டார் - அறிந்து கொள்ளுங்கள் அடியபன் தூங்கிவிட்டார்" என்று அறிவிக்கும் படி அவருக்குக் கட்டளையிட்டார்கள்." ( அபூதாவூத் - ஸஹீஹ் )

21. உண்மையான அதிகாலை உதயமாவதற்கு முன்னரும் ஓர் அதான் கூறப்படுமேயானால் அது சிறந்ததாகும். ஏனென்றால் அதன் மூலமாக தூங்கக் கூடியவர் விழித்து விடுவார். இரவுத் தொழுகையில் ஈடுபட்டிருப்பவர் தன் இரவுத் தொழுகையை முடித்துக் கொண்டு பஜ்ர் தொழுகையின் பால் திரும்பி விடுவார்.

"உங்களில் ஒருவரை அவர் ஸஹர் செய்வதை விட்டும் பிலாலுடைய அதான் நிச்சயமாக தடுத்து விட வேண்டாம். நின்று வணங்குபவர் திரும்பும் பொருட்டும், உங்களில் தூங்கக் கூடியவர் விழிக்கும் பொருட்டும் நிச்சயமாக அவர் இரவிலே அதான் கூறுகின்றார். (ஸஹீஹுல் புகாரி)

22. இகாமத் கூறியதன் பிறகு அந்தக் கடமையான தொழுகையைத் தவிர வேறு எந்தத் தொழுகையையும் தொழக் கூடாது.

"தொழுகைக்காக இகாமத் கூறப்பட்டு விட்டால் கடமை யான (அந்த)த் தொழுகையைத் தவிர வேறு தொழுகைக் கிடையாது."

(ஸஹீஹ் முஸ்லிம் - அன் அபீ ஹுரைரா)

23. இரண்டு தொழுகைகள் ஒரே நேரத்தில் தொழ வேண்டிய நிலை ஏற்பட்டால் ஒரு முறை அதான் கூறி, ஒவ்வொரு தொழுகைக்காகவும் வேறு வேறாக இகாமத் கூற வேண்டும்.

“அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அரபாவில் வைத்துஇரண்டு தொழுகைகளை ஓர் அதான், இரண்டு இகாமத்துகளைக் கொண்டு நிறைவேற்றினார்கள்.”

(ஸஹீஹ் முஸ்லிம் - அன் ஜாபிர்)

24. அதானின் வார்த்தைகள்.

அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்

அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்

அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹ்

அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹ்

அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்

அல்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்

ஹய்யா அலஸ் ஸலா ஹய்யா அலஸ் ஸலா

ஹய்யா அலல் பலாஹ் ஹய்யா அலல் ,பலாஹ்

அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்

லாஇலாஹ இல்லல்லாஹ்

## 25. இகாமத்தின் வார்த்தைகள்.

அல்லாஹுஃ அக்பர் அல்லாஹுஃ அக்பர்

அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹ்

அஷ்ஹது அன்ன முஹம்மதர்ரஸூலுல்லாஹ்

ஹய்யா அலஸ் ஸலா ஹய்யா அலல் ஃபலா

கத்காமதிஸ்ஸலா, கத்காமதிஸ் ஸலா

அல்லாஹுஃ அக்பர் அல்லாஹுஃ அக்பர்

லாஇலாஹ இல்லல்லாஹ்

( அஹ்மது, அபூதாவூத் - ஸஹீஹ் - நைலுல் அவ்தார் )

## 26. இகாமத் கூறியதன் பிறகு சற்று நேரம் இமாம் பேசிக் கொண்டிருப்பதில் ஈடுபட்டு விட்டால் எவ்வித குற்றமுமில்லை.

“இகாமத் சொல்லப் பட்டு விட்டது. அல்லாஹ்வின் தூதரோ பள்ளியின் ஓர் ஓரத்தில் ஒரு மனிதரோடு பேசிக் கொண்டிருந்தார்கள். மக்கள் தூங்கி விடும் வரை அவர்கள் தொழுகைக்காக எழுந்து வரவில்லை.”

27. அதானுடைய ஸுன்னத்தாக்கப் பட்ட மற்றுமொரு முறை.

அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்

அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்

இதனை உரத்த குரலில் கூற வேண்டும். பிறகு,

அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹ்

அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹ்

அஷ்ஹது அன்ன முஹம்மதர்ரஸூலுல்லாஹ்

அஷ்ஹது அன்ன முஹம்மதர்ரஸூலுல்லாஹ்

என்று குரலைத் தாழ்த்திக் கூற வேண்டும். பிறகு,

அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹ்

அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹ்

அஷ்ஹது அன்ன முஹம்மதர்ரஸ˜லுல்லாஹ்

அஷ்ஹது அன்ன முஹம்மதர்ரஸ˜லுல்லாஹ்

ஹய்யா அலஸ் ஸலா ஹய்யா அலஸ் ஸலா

ஹய்யா அலல் ∴பலாஹ் ஹய்யா அலல் ∴பலாஹ்

அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்

லாஇலாஹ இல்லல்லாஹ்.

என்று உரத்த குரலில் கூற வேண்டும். இந்த அதானின் இகாமத்திற்குரிய வார்த்தைகள் சற்று மாற்றமாக அமையும்.

அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்

அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்

அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹ்

அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹ்

அஷ்ஹது அன்ன முஹம்மதர்ரஸூலுல்லாஹ்

அஷ்ஹது அன்ன முஹம்மதர்ரஸூலுல்லாஹ்

ஹய்யா அலஸ் ஸலா ஹய்யா அலஸ் ஸலா

ஹய்யா அலல் ஃபலாஹ் ஹய்யா அலல் ஃபலாஹ்

கத்காமதிஸ் ஸலா கத்காமதிஸ் ஸலா

அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்

லாஇலாஹ இல்லல்லாஹ். ( திர்மிதி )

28. பஜ்ர் தொழுகையின் அதானில் 'ஹய்யா அலல் ஃபலாஹ்' க்குப் பிறகு இருமுறை "அஸ்ஸலாத்து ஹைரும் மினன் நவ்ம், அஸ்ஸலாத்து ஹைரும் மினன் நவ்ம்" கூறிக் கொள்ள வேண்டும். "தொழுகை தூக்கத்தை விடச் சிறந்தது, தொழுகை தூக்கத்தை விடச் சிறந்தது."

"நீர் பஜ்ருடைய அதானில் 'ஹய்யா அலல் ,பலாஹ்' என்று கூறக் கூடியவராக இருந்தால், (அதன் பிறகு) 'அஸ்ஸலாத்து ஹைரும் மினன் நவ்ம்' என்று கூறிக் கொள்"

(அபூதாவூத், நஸாஈ, இப்னு குஸைமா, நைலுல் அவ்தார்)

29. கடுமையான குளிர் அல்லது மழையாக இருக்குமேயானால் (விஷேடமாக பிரயாணத்தில்) 'அஸ்ஸலாத்து ஹைரும் மினன்நவ்ம்' என்று கூறியதற்குப் பிறகு "வமன் கஅத ஃபலா ஹரஜ" என்று கூறிக் கொள்ளவும். அதாவது (பள்ளிக்கு வராது) யாரேனும் வீட்டில் இருந்து விடுவாரேயானால் எவ்விதக் குற்றமுமில்லை.

"நபி (ஸல்) அவர்களுடைய முஅத்தின் கடுமையான குளிருடைய ஓர் இரவிலே பஜ்ருக்கு அதான் கூறினார். (அப்போது நான்) 'வமன் கஅத ஃபலா ஹரஜ' என்று கூறினால் சிறப்பாக இருக்குமே? என்று எண்ணினேன். "அஸ்ஸலாத்து ஹைரும் மினன் நவ்ம்" என்று கூறிய போது அவர் அதனையே கூறினார்."

( அப்துர் ரஸ்ஸாக் - ஸஹீஹ் , ப்ஹுல் பாரி )

30. அல்லது 'ஹய்யா அலஸ் ஸலா' திற்குப் பதிலாக 'அஸ்ஸலாத்து ஃபிர் ரிஹால்' எனக் கூற வேண்டும். அதாவது (தங்கள்) இடங்களில் தொழுகையை நிறை வேற்றிக் கொள்ளவும். அல்லது 'ஸல்லூ ஃபீ புயூதிகும்' அதாவது தங்கள் வீடுகளில் தொழுது கொள்ளவும்.

"மழை பெய்து கொண்டிருக்கும் ஒரு நாளில் இப்னு அப்பாஸ் எங்களுக்கு குத்பாச் செய்தார்கள். முஅத்தின் 'ஹய்யா அலஸ் ஸலா' என்பதை அடைந்த போது "அஸ்ஸலாத்து ஃபிர் ரிஹால்" என்று அறிவிக்கும்படி அவருக்குக் கட்டளையிட்டார்கள். (பிறகு) "என்னை விடச் சிறந்தவர் இதைச் செய்தார்." எனக் கூறினார்கள்."

(ஸஹீஹுல் புஹாரி)

மற்றுமொரு அறிவிப்பில் :

"ஹய்யா அலஸ் ஸலா" என்று கூறாதே...

"ஸல்லூ ஃபீ புயூதிகும் - (உங்கள் வீடுகளில் தொழுது கொள்ளுங்கள்) என்று கூறு,, என இடம் பெற்றுள்ளது. (ஸஹீஹுல் புஹாரி - கிதாபுல் ஜும்ஆ)

31. அல்லது அதானின் பிறகு 'அஸ்ஸலாத்து ஃபிர் ரிஹால்' என்ற வாசகத்தைக் கூறவும். 'தெரிந்து கொள்ளுங்கள் (உங்கள்) இடங்களில் தொழுகையை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.'

"பிரயாணத்தில் கடும் குளிருடைய இரவில், மற்றும் மழை பெய்து கொண்டிருக்கும் நாளில் அதான் கூறும்படி முஅத்தினுக்குக் கட்டளையிட்டு விட்டு அதன் பிறகு "அஸ்ஸலாத்து ,பிர் ரிஹால்" என்று

கூறும்படியும் கட்டளையிடக் கூடியவர்களாக அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இருந்தார்கள்.” (ஸஹீஹுல் புஹாரி)

32. அதான் கூறும் போது “அல்லாஹு அக்பருல்லாஹு அக்பர்” என்று சேர்த்துக் கூற வேண்டும். பிறகு இரண்டாவது முறையும் அவ்வாறே “அல்லாஹு அக்பருல்லாஹு அக்பர்” என்று சேர்த்துக் கூற வேண்டும். இவ்வாறே “லாஇலாஹ இல்லல்லாஹு” விற்கு முந்தியும் “அல்லாஹு அக்பருல்லாஹு அக்பர்” என்று சேர்த்துக் கூற வேண்டும்.

“முஅத்தின் ‘அல்லாஹு அக்பருல்லாஹு அக்பர்’ என்று கூறினால் உங்களில் ஒருவரும் “அல்லாஹு அக்பருல்லாஹு அக்பர்” என்று கூறிக் கொள்வார்.” என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

# ஸப் அமைத்தல்

01. ஸப்புகளை சமமாக அமைத்துக் கொள்ளுங்கள்.

“ உங்களுடைய ஸப்புகளை சமமாக அமைத்துக் கொள்ளுங்கள். ” (ஸஹீஹ் முஸ்லிம்)

02. நேராகவும் ஸப்புகளை அமையுங்கள். சுண்ணாம்பு பூசப்பட்டு அழகாகவும், நேராகவும் இருக்கின்ற மதிலைப் போன்று அனைவரும் ஸப்பிலே நில்லுங்கள்.

“ஸப்புகளை நேராக்கி, நன்றாக ஒன்றோடொன்று இணைத்து நில்லுங்கள்.”

(ஸஹீஹுல் புஹாரி,ஸஹீஹ் முஸ்லிம்)

03. ஒவ்வொருவரும் தன்னருகில் நிற்பவருடைய தோளோடு தோளையும் பாதத்தோடு பாதத்தையும் இணைக்க வேண்டும்.

“எங்களிலே ஒருவர் தன் தோளை தன் தோழனின் தோளுடன் தன பாதத்தை அவரது பாதத்துடனும் சேர்த்து

வைக்கக் கூடியவராக இருந்தார்.” என அனஸ் அவர்கள் கூறுகின்றார்கள். (ஸஹீஹுல் புஹாரி)

04. கரண்டைக்காலைக் கரண்டைக் காலுடன் சேர்த்து வைக்கவும் வேண்டும்.

“எங்களிலுள்ள ஒரு மனிதர் தனது தோளைத் தனது தோழனுடைய 7தோளுடனும், தனது கரண்டைக்காலை அவருடைய கரண்டைக்காலுடனும் இணைத்துக் கொண்டிருப்பதை நிச்சயமாக நான் கண்டேன்.” என நு.ஃ.மான் கூறினார்கள்.

(அபூதாவூத் - ஸஹீஹ், இப்னு குஸைமா, பத்ஹுல் பாரி)

05. தோள்கள், கழுத்துக்களை முன்னுக்குப்பின் வைக்காதீர்கள். மாறாக, ஒன்றுக்கொன்று சீராக இருத்தல் வேண்டும்.

“தோள்களுக்கு மத்தியில் நேரான நிலையைக் கடைப்பிடியுங்கள்.”

(அபூதாவூத், ஹாகிம், இப்ன குஸைமா, மிர்ஆத்)

“கழுத்துக்களையும் (கோணலின்றி) நேராக வைத்துக் கொள்ளுங்கள்.” ( அபூதாவூத், மிர்ஆத் )

06. நெஞ்சுகளையும் முன்னுக்குப்பின் வைக்கக் கூடாது.

“(நபி (ஸல்) அவர்கள் தொழுகை நடாத்தும் பொருட்டு) ஒரு நாள் புறப்பட்டு வந்து நின்று தக்பீர் கட்டலானார்கள்.

அப்போது ஸப்பை விட்டும் ஒரு மனிதர் தன் நெஞ்சை வெளியில் வைத்துக் கொண்டிருப்பதைக் கண்டு “அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக உங்களது ஸப்புகளைச் சமமாக வைத்துக் கொள்ளுங்கள். அப்படி யில்லையாயின் உங்களுக்கு மத்தியில் அல்லாஹ் நிச்சயமாக முரண்பாடுகளை ஏற்படுத்தி விடுவான்.” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

07. ஸப்புகளைப் பூரணப்படுத்துங்கள். எந்த ஸப்பும் குறையுள்ளதாக இருக்கக் கூடாது. குறையிருப்பதாக இருந்தால் இது இறுதி ஸப்பிலேயே இருக்கும்.

“தொழுகையின் வரிசைகளைப் பூரணப்படுத்துங்கள்”.

( ஸஹீஹ் முஸ்லிம் )

“ஆரம்ப ஸப்பையும் அதற்கு அடுத்து வரக்கூடிய ஸப்புகளையும் பூரணப்படுத்துங்கள். ஏதேனும் ஒரு குறையிருப்பதாக இருந்தால், அது இறுதி ஸப்பிலேயே இருக்கட்டும்.”

( அபூதாவூத், நஸாஈ, மிர்ஆத் - ஸஹீஹ், அத்த.்.லீகாத்)

08. ஸப்புகள் ஒன்றுக்கொன்று நெருக்கமானதாக இருக்க வேண்டும்.

“உங்களது ஸப்புகளை நேராக, நன்றாக இணைத்து நில்லுங்கள். அவைகளை நெருக்கமாகவும் வைத்துக் கொள்ளுங்கள்.”

(அபூதாவூத், இப்ன குஸைமா, மிர்ஆத்)

09. இகாமத் சொல்லப்பட்டதன் பிறகு ஸப்பிலே இணைந்து கொள்ளும் பொருட்டு ஓடி வர வேண்டாம். மாறாக கண்ணியமான முறையிலே நடந்து வர வேண்டும்.

"தொழுகைக்காக இகாமத் கூறப்பட்டுவிட்டால், அதற்கு விரைந்து வராதீர்கள். அதற்காக நடந்து வாருங்கள். உங்கள் மீது அமைதியை அவசியப்படுத்துகினறேன்."

ஸஹீஹுல் புகாரியின் அறிவிப்பில் "கண்ணியத்தையும் அவசியப்படுத்துகின்றேன்." என்று இடம் பெற்றுள்ளது.

(ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

10. இரு தூண்களுக்கிடையில் ஸப்பு அமைக்கக் கூடாது.

"தூண்களுக்கிடையில் தொழுவதை விட்டும் நாம் விலக்கப்படக் கூடியவர்களாக இருந்தோம்." என அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

(இதனை ஹாகிமும், தஹபியும் சரி கண்டுள்ளார்கள் )

"ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய காலத்தில் "தூண்களுக்கிடையில் தொழுவதை விட்டும் நாம் விலக்கப்படக் கூடியவர்களாக இருந்தோம்." என இடம்பெற்றுள்ளது.

(ஹாகிம்)

11. ஓர் ஆண் ஸப்புக்குப் பின்னால் தனித்து நிற்கக் கூடாது.

"ஸப்புக்குப் பின்னால் தனித்து நிற்கக் கூடிய ஆணுக்கு தொழுகையே இல்லை."

(அஹ்மது, இப்னுமாஜா, புலூகுல் அமானி )

12. பெண் தனித்து நிற்க முடியும்.

“ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னை அவர்களது வலது புறத்திலும், பெண்ணை எங்களுக்குப் பின்னாலும் நிறுத்தாட்டினார்கள்.” என அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

13. ஓர் ஆண் தவறுதலாக ஸப்புக்குப் பின்னால் தனித்து நின்று தொழுது விட்டால் அத்தொழுகையை மீட்டிக் கொள்ளவும்.

“ஒரு மனிதர் ஸப்புக்குப் பின்னால் தனித்து நின்று தொழுது கொண்டிருப்பதைக் கண்ட ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொழுகையை மீட்டும்படி அவருக்குக் கட்டளையிட்டார் கள்.”
(அஹ்மது, அபூதாவூத், திர்மிதி, இப்ன குஸைமா, மிர்ஆத்)

14. தற்செயலாக இமாமுக்கும் மஃமூம்களுக்குமிடையில் சுவர் அல்லது வேறு ஏதாவதொன்று குறுக்கே வந்து விட்டால் தொழுகை ஏற்றுக் கொள்ளப் பட்டு விடும்.

"அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தன் அறையில் தொழ, மக்கள் அறைக்குப் பின்னால் நின்று கொண்டு அவர்ளைப் பின்துயர்ந்து கொண்டிருந்தார்கள்."

( அபூதாவூத், மிர்ஆத்)

15. இரண்டு பேர் இருந்தால் ம.்.மூம் இமாமுக்கு வலது புறம் நிற்க வேண்டும். மூன்று பேர்கள் இருந்தால் இமாம் முன்னால் நிற்க வேண்டும், ம.்.மூம்கள் பின்னால் நிற்க வேண்டும்.

"அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் என்னை அவர்களது வலது புறத்தில் நிறுத்தாட்டினார்கள். பிறகு ஜப்பார் வந்து அவர்களது இடது பக்கம் நின்று கொண்டார். உடனே எங்கள் இருவரது கரங்களையும் பிடித்து அவர்களுக்குப் பின்னால் நிறுத்தாட்டும் வரை தள்ளி விட்டார்கள்." என ஜாபிர் (ரலி) அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

"நான் அல்லாஹ்வின் தூதருக்குப் பின்னால் தொழுதேன். அப்போது என்னை இழுத்து அவர்களின் ஓரமாக (நேராக)ஆக்கினார்கள்." என இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

(அஹ்மது, புலூகுல் அமானி, ஹாபிழ் இப"னு ஹஜர், பத்ஹுல் பாரி )

16. இமாமைத் தவிர ஓர் ஆணும் ஒரு பெண்ணும் இருந்தால், ஆண் இமாமுடைய வலது புறத்திலும் பெண் இமாமுக்குப் பின்னாலும் நிற்க வேண்டும்.

“என்னை அவர்களது வலது புறத்தில் நிறுத்தாட்டி னார்கள். பெண்ணை எங்களுக்குப் பின்னால் நிறுத்தாட்டி னார்கள்.” என அனஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

17. அனைத்து ஸப்புகளும் சரியாக சீராகாத வரை இமாம் தொழுகையை ஆரம்பிக்கக் கூடாது.

“சரியாக, சமமாக நின்று விட்டோமென்றால் அல்லாஹு அக்பர் என்று கூறி தொழுகையை ஆரம்பிப்பார்கள்.”

( அபூதாவூத், அத்த.ீ.லீகாத் )

18. முறிவுகளின்றி ஸப்பை இணைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

“யார் ஸப்போடு இணைந்திருக்கின்றாரோ அல்லாஹ் அவரை இணைத்துக் கொள்கின்றான். யார் ஸப்பைத் துண்டிக்கின்றாரோ அல்லாஹ் அவரைத் துண்டித்து விடுகின்றான்.”

( அபூதாவூத், அத்த.ீ.லீகாத் )

19. முடியுமான வரை ஆரம்ப ஸப்பில் நிற்பதற்கு முயற்சி செய்யுங்கள். ஏனென்றால் ஆரம்ப ஸப்பில் நிற்பதற்கு பெரும் சிறப்புண்டு.

“முதலாவது ஸப்பில் இருக்கக் கூடியவற்றை (சிறப்பை) அறிவார்களேயானால் (அதற்காகத்) துண்டு குலுக்குவார்கள்.” (ஸஹீஹுல் புஹாரி)

20. இரண்டு பேர்கள் ஜமாஅத்தாக தொழுது கொண்டிருக்கும் பொழுது மூன்றாவது நபர் இணைந்தால் இமாம் இரண்டு மஃமூம்களின் கரங்களைப் பிடித்து அவர்களைப் பின்னால் ஆக்கி விட வேண்டும்.

“என்னை அவர்களது வலது புற பக்கத்தில் நிறுத்தாட்டினார்கள். பிறகு ஜப்பார் வந்து அவர்களது இடது புறத்தில் நிற்க எங்கள் இருவரது இரு கரங்களையும் பிடித்து அவர்களுக்குப் பின்னால் நிறுத்தும் வரை எங்களைத் தள்ளினார்கள்.” என ஜாபிர் வஅவர்கள் கூறினார்கள்.

( ஸஹீஹ் முஸ்லிம்)

21. பருவ வயதை அடைந்தவர்கள், மார்க்க ஞானம் உள்ளவர்கள் முன் வரிசையில் நின்று கொள்ள வேண்டும். இவ்வாறு அந்தஸ்துகளுக்கு ஏற்றவாறு ஸப்பில் நிற்க வேண்டும்.

“பருவ வயதை அடைந்தவர்களும், (மார்க்க) ஞானமுள்ளவர்களும் (ஸப்பில்) என்னை அடுத்திருக்கட்டும். பிறகு அவர்களை மற்றவர்கள் அடுத்திருக்கட்டும்.”என்று மூன்று முறைக் கூறினார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

22. பெண்களின் ஸப்புகள் ஆண்களின் ஸப்புகளுக்குப் பின்னால் அமைக்கப்பட வேண்டும்.

“ஆண்களுடைய ஸப்புகளிலே சிறந்தது அதனது ஆரம்பமாகும். அதிலே கெட்டது அதனது இறுதியாகும். பெண்களின் ஸப்புகளிலே சிறந்தது அதனது இறுதியாகும். அதிலே கெட்டது அதனது ஆரம்பமாகும்.”

(ஸஹீஹ் முஸ்லிம்)

“நானும் யதீம் என்பவரும் எங்களுடைய வீட்டில் நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னால் தொழுதோம். உம்முஸ் ஸுலைம் எங்களுக்குப் பின்னால் நின்றார்கள்.” என அனஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

23. ஆண்களுக்குப் பின்னால் சிறுவர்களினதும் சிறுவர்களுக்குப் பின்னால் பெண்களினதும் ஸப்புகள் அமைக்கப்படல் வேண்டும்.

"ஆண்களை ஸப்பமைத்தார்கள். பிறகு ஆண்களுக்குப் பின்னால் சிறுவர்களை ஸப்பமைத்தார்கள். பிறகு சிறுவர்களுக்குப் பின்னால் பெண்களை ஸப் அமைத் தார்கள்."

( முஸ்னத் அஹ்மது - ஸஹீஹ் )

24. முதலிலே இகாமத் கூறப்பட வேண்டும். பிறகு இமாம் வருவதைக் கண்டதும் எழுந்து நின்று ஸப்புகள் அமைக்க வேண்டும். இமாம் தன் தொழும் இடத்தைச் சென்றடைவதற்கு முன்னர் மக்கள் ஸப்புகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

நிச்சயமாக றஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்காக வேண்டி தொழுகைக்ககா இகாமத் கூறப்படும். உடனே முஹம்மது (ஸல்) அவர்கள் தன் இடத்திற்குச் சென்றடைவதற்கு முன்னர் மக்கள் தங்கள் ஸப்புகளை அமைத்துக் கொள்வார்கள்.

( ஸஹீஹ் முஸ்லிம்)

" இகாமத் கூறப்பட்டு விட்டால், நிச்சயமாக நான் வெளியேறி வந்து விட்டேன் " என்று என்னை நீங்கள் காணாதவரை எழும்பாதீர்கள்.

( ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

25. ஸப்புகளை சரி செய்யும் பொருட்டு கையில் ஒரு தடியை வைத்துக் கொள்ள வேண்டும்.

அனஸ் (ரலி) அவர்கள் "இது என்ன குச்சி என அறிவீர்களா?" எனக் கேட்பார்கள். நாங்கள் "இல்லை" என்று கூறினோம். அதற்கு அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) தொழுகைக்காக எழுந்தால், தனது வலது கரத்தில் அதனை எடுத்து, பிறகு திரும்பி " நேராக இருங்கள், உங்கள் ஸப்புகளை சமமாக வைத்துக் கொள்ளுங்கள்" எனக் கூறுவார்கள் எனக் கூறினார்கள்.

( இப்னு ஹிப்பான் - ஸஹீஹ்)

26. ஸப்புகளை சரி செய்யக் கூடியோரின் கரங்களுக்கு உங்களை இலகுபடுத்திக் கொடுங்கள்.

உங்கள் சகோதரர்களின் கரங்களுக்கு உங்களை மென்மையாக்கிக் கொடுங்கள்.

(அபூதாவூத், ஹாகிம், இப்னுகுஸைமா, மிர்ஆத், அத்த.்.லீகாத்)

27. இமாம் தானாகவே ஸப்புகளை சரி செய்வது அவசியம். ஸப்புகளை சரி செய்யும் விடயத்தில் மிகுந்த கவனம் செலுத்துதல் வேண்டும்.

ஈட்டியைச் சரி செய்வது போன்று எங்கள் ஸப்புகளை மிகவும் நன்றாக சரி செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள்.

( ஸஹீஹ் முஸ்லிம் )

28. இமாம் ஸப்புகளுக்கிடையில் சுற்றித் திரிந்து ம.்.மூம்களினது தோள்களிலும், நெஞ்சுகளிலும் கையை வைத்து "நேராக இருங்கள், முன்னுக்குப் பின்னாகாதீர்கள்" என்று கூற வேண்டும்.

தொழுகையில் எங்களது தோள்களைத் தடவி “நேராக இருந்து கொள்ளுங்கள், முரண்பட்டுக் கொள்ளாதீர்கள்” எனக் கூறக் கூடியவர்களாக இருந்தார்கள்.

( ஸஹீஹ் முஸ்லிம் )

ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கம் வரை ஸப்புகளுக்கிடையில் சென்று எங்களது நெஞ்சுகளைத் தடவுவார்கள்.

(நஸாஈ - ஸஹீஹ் )

29. முடியுமானவரை வலது பக்கமாக நிற்க வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

சப்புகளின் வலது பக்கங்களில் (மலக்குகள்) ஸலவாத்துக் கூறுகின்றார்கள். ( ஷரஹுஸ் ஸுன்னா - ஸஹீஹ் )

(இன்ஷா அல்லாஹ் தொடரும் )

# ஸஹீஹான ஹதீஸ் ஒன்று

“இந்த மார்க்கம் பன்னிரண்டு கலீபாக்கள் வரை மிகவும் பலமானதாக இருக்கும். அவர்கள் (பன்னிரண்டு பேர்களும்) குறைஷிகளாக இருப்பர்.”என நபி ஸல் அவர்கள் கூறினார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

# மவ்ழூ, ( இட்டுக்கட்டப்பட்ட) ஹதீஸ் ஒன்று

“இந்த மார்க்கம் பன்னிரண்டு கலீபாக்கள் வரை மிகவும் பலமானதாக இருக்கும். அவர்கள் (பன்னிரண்டு பேர்களும்) குறைஷிகளாக இருப்பர்.”என நபி ஸல் அவர்கள் கூறினார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

இதற்கு அறிவிப்பாளர் பட்டியல் இல்லை என்று இமாம் இறாக்கியும் இமாம் ஸாபுக்கியும் கூறுகிறார்கள். எனவே இது நபி ஸல் அவர்களின் பெயரால் இட்டுக்கட்டப்பட்டதாகும்.

# லயீபான ஹதீஸ் ஒன்று

"யார் அல்லாஹ்வுக்காக நாற்பது நாட்களை ஒதுக்குகின்றாரோ, அவரின் நாவிலிருந்து ஞானத்தின் ஊற்றுக்கண்கள் வெளியாகும்".

அபூநயீம் - அல்அஹாதீதுல் லயீபா வல் மவ்லூஆ எண் : 38

இது முர்ஸல் - ( தொடர் துண்டிக்கப்பட்டது) என்ற தரத்தில் உள்ளது. முர்ஸல் என்பது பலயீனமானது. இதன் அறிவிப்பாளர்களில் யஸீத் என்பவர் பலயீனமானவர்.

# ஜனாஸா

- தொடர் : 06 -

## கவலையை வெளிப்படுத்தல்

◈ எவரும் எவருடைய மரணத்திற்காவும் மூன்று நாட்களுக்கு மேல் கவலையை வெளிப்படுத்தக் கூடாது.

◈ இறந்தவர் ஒரு பெண்ணின் கணவராக மட்டும் இருந்தால், அவள் நான்கு மாதம், 10 நாட்கள் கவலையை வெளிப்படுத்துமுகமாக “இத்தா” இருக்க வேண்டும்.

(அறபியில் ( ) “இஹ்தாத்” என்ற சொல்லின் கருத்து யாதெனில், தன்னை அலங்கரிக்காது, வாசனைத் திரவியங்கள் பூசாது, தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுதல்.)

அல்லாஹ்வையும் மறுமையையும் விசுவாசங் கொண்ட எந்த ஒரு முஸ்லிமான பெண்ணுக்கும் மூன்று நாட்களுக்கு மேல் கவலை

தெரிவிப்பது கூடாது. தன் கணவனுக்கே தவிர. அவருக்காக நான்கு மாதங்களும் 10 நாட்களும் கூடுமானதாகும்.

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

# வாரிசுரிமை

01. ஒருவர் அதிகமான சொத்துக்களை விட்டுச் சென்றால், அவைகளை அவரின் வாரிசுகளுக்கு பங்கிட்டுக் கொடுப்பது கடமையாகும். இதற்கு அறபியில் "பராயிழ்" என்று கூறப்படும். யாருக்கு எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று குர்ஆன், ஹதீஸில் கூறப்பட்டுள்ள விடயங்களை ஒவ்வொரு முஸ்லிமும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். இக்கலையைப் படிப்பதும், மற்றவர்களுக்குப் படித்துக் கொடுப்பதும் கடமையாகும்.

நீங்கள் "பராயிழ்" என்ற கலையைக் கற்றுக் கொள்ளுங்கள். அதை மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுங்கள் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.

(அஹ்மத் அவர்கள் தங்கள் மகனைத் தொட்டும், அந்நஸாஈ, அல்ஹாகிம், அத்தாரமி, அத்தாரகுத்னி - அவ்ப், ஸுலைமான் பின் ஜாபிர் வழியாக பதிவு செய்துள்ளனர். இந்தத் தொடர் அவ்பிற்கும் ஸுலைமானுக்குமிடையில் அறுபட்டுள்ளது. எனினும் நல்ர் பின் ஷுமைலும் ஷரீக்கும் இவ்விருவரல்லாதவர்களும், தொடர் அறுபடாது அறிவித்துள்ளனர். (நைலுல் அவ்தார்). இத்தொடரில் வரும் நழ்ர் பின் ஷுமைல் என்பவர் உறுதியானவரும் நம்பகமானவரும் என்று தக்ரீப் என்று நூலில் காணப்படுகின்றது. எனவே இதன் ஸனத் ஸஹீஹ் என்ற தரத்திலுள்ளது.)

02. மரணித்தவர் விட்டுச் சென்ற சொத்து அதிகமாகவோ, குறைவாகவோ இருப்பினும் அதை உரியவர்களுக்கு பங்கிட்டுக் கொடுக்க வேண்டும்.

பெற்றாரோ, நெருங்கிய உறவினரோ விட்டுப் போன பொருள்களில் அவை அதிகமாகவோ, கொஞ்சமாகவோ இருந்த போதிலும் ஆண்களுக்குப் பங்கு உண்டு. (அவ்வாறே) பெற்றோர்களோ, நெருங்கிய உறவினரோ விட்டுச் சென்ற பொருள்களில் (அவை அதிகமாகவோ, கொஞ்சமாகவோ இருந்த போதிலும்) பெண்களுக்கும் பங்கு உண்டு.

(இது அல்லாஹ்வால்) விதிக்கப்பட்ட பங்காகும். ( ஸூரத்துந் நிஸா : 07 )

03. கடனாளியாக ஒருவர் மரணித்தால், முதலில் அவரின் கடன்கள் நிறைவேற்றப்பட வேண்டும்.

நபி ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :
வஸிய்யத்திற்கு முன் கடனை நிறைவேற்ற வேண்டும். வாரிசுக்கு வஸிய்யத் இல்லை.
(பைஹகி - ஸனதுஹு ஸஹீஹ். ஸஹீஹுல் ஜாமிஉஸ் ஸகீர் - அல்பானி )

மேற்கூறப்பட்ட சட்டங்கள் அனைத்தும் அவர் செய்த வஸிய்யத்திற்கும் அவரின் கடனிற்கும் பிறகாகும். ( 4 : 11 )

04. மரணித்தவரின் சொத்துக்கள் பங்கிடும்போது, சொத்துக்களுக்கு உரிமையில்லாத உறவினர்கள், மிஸ்கீன்கள் (ஏழைகள்), அனாதைகள் அவ்விடத்திற்கு வந்தால் அவர்களை விரட்டாது, அவர்களுக்கும் அதிலிருந்து ஒரு சிறிய தொகையைக் கொடுக்க வேண்டும். அவர்களோடு அழகிய வார்த்தைகளைக் கொண்டு பேச வேண்டும்.

(பாகப்) பிரிவினை செய்து கொள்ளும் இடத்திற்கு பாகப்பிரிவுக்குள் அடங்காத உறவினரோ, அநாதைகளோ, ஏழைகளோ வந்து விட்டால் அவர்களுக்கும் அதிலிருந்து கொடுத்து, அவர்களுக்கு அன்பான வார்த்தைகளைக் கூறிவிடுங்கள். (4 : 8)

05. வாரிசுகளுக்கு சொத்துக்களை குர்ஆன், ஹதீஸில் வந்துள்ளபடி பங்கிட்டுக் கொடுத்த பின் சொத்தில் மீதியிருந்தால், அதை மரணித்தவர்களின் நெருங்கிய உறவினர்களில் ஆண்களுக்குக் கொடுக்க வேண்டும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :
சொத்துக்களை அதற்குரியவர்களுக்குச் சேர்த்து வையுங்கள். அதில் மீதியிருந்தால்,அது மரணித்தவரின் நெருங்கிய ஆணுக்காகும்.
(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

06. ஒரு முஸ்லிமின் சொத்தை காபிருக்கும், ஒரு காபிரின் சொத்தை முஸ்லிம்களுக்கும் பங்கிடக் கூடாது.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :
ஒரு முஸ்லிம் காபிரின் சொத்திற்கு வாரிசாகமாட்டார். ஒரு காபிர் முஸ்லிமின் சொத்திற்கு வாரிசாகமாட்டார்.
(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

07. இஸ்லாத்தில் நுழைய முன் பிரிக்கப்பட்ட சொத்துக்களைப் பின்னர் இஸ்லாத்தில் நுழைந்ததும் அதில் எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்த அவசியமில்லை.

ஜாஹிலிய்யத்தில் பிரிக்கப்பட்ட அனைத்து சொத்துக்களும் (இஸ்லாத்திற்கு பின்னும்) பிரிக்கப்பட்டபடியே வைக்கப்படும் என நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.
(அபூதாவூத், இமாம் அல் முன்திரி இந்த ஹதீஸ் சம்பந்தமாக மௌனம் சாதித்துள்ளார். இதை அல்லியாஉ தனது “அல் முக்தாரா” என்ற நூலில் பதிவு செய்துள்ளார். - நைலுல் அவ்தார் )

08. சொத்துக்கு வாரிசாக இருப்பவர்களில் ஒருவர், சொத்துக்காரரைக் கொலை செய்து விட்டால், அவரின் சொத்திலிருந்து கொலை செய்தவருக்குரிய பாகத்தை கொடுக்காது தடுக்க வேண்டும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :
கொலை செய்தவர் தனக்குரிய பங்கில் எதையும் பெறமாட்டார்.
(அபூதாவூத் - இப்னு உமரைத் தொட்டும் அறிவித்துள்ளார். இதன் தொடர் மிக வலுவானது. இதற்கு பல வலுவூட்டுபவைகளும் உள்ளன. நைலுல் அவ்தார் )

09. ஒருவர் ஓர் அடிமையை சொத்துக்களுடன் உரிமையிட்டு, அவ்வடிமை சொத்துக்களிலிருக்கும் நிலையில் இறந்து விட்டால், அச்சொத்துக்களை அவ்வடிமையின் உறவினர்களுக்கு சட்டப்படி பங்கிடப்படும். பங்கிட்ட பின் சொத்தில் மீதி இருக்குமேயானால், அதை அவரை உரிமையிட்ட “ஸைய்யிதுக்குக” கொடுக்கப்படும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :
“பொறுப்பு உரிமையிட்டவருக்காகும்.” (எனவே மீதிச் சொத்து அவரை உரிமையிட்டவருக்காகும்.)
(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

10. ஒரு கணவன் தன் மனைவிமீது படுதூறு கூறி, நான்கு சாட்சிகள் இல்லாதபட்சத்தில் தங்களுக்குள் சாபம் (லி.ஃ.னத்) இட்டுக் கொண்டு பிரிந்துவிட்டால், அந்நிலையில், மனைவியானவளின் வயிற்றில் குழந்தை காணப்பட்டால், அக்குழந்தை தன் தாயின் சொத்துக்கு வாரிசாவாள். தாய் அக்குழந்தையின் சொத்துக்கு வாரிசாவாள்.

ஸஹ்ல் பின் ஸஃத் கூறுகின்றார்கள் :

அல்லாஹ் அவர்களுக்கு விதித்த சொத்தில் ஸுன்னத் என்னவெனில், அக்குழந்தை அவளுக்கு வாரிசாவாள். அவள் அக்குழந்தைக்கு வாரிசாவாள்.

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

11. பெண் பிள்ளைகளுக்கு கொடுக்கும் பாகத்தைப் போன்று இரு மடங்கு ஆண்களுக்கு கொடுக்க வேண்டும்.

உங்கள் சந்ததியில் ஆணுக்கு, இரு பெண்களுக்குரியது போன்ற பாகம் உண்டென்று அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகின்றான். (4 : 11 )

12. மரணித்தவருக்கு ஆண் பிள்ளைகளல்லாது, பெண் பிள்ளைகள் மட்டும் இருந்தால், அவரின் சொத்திலிருந்து மூன்றில் இரு பங்கை அவர்க ளுக்கு மத்தியில் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். அதில் மீதியிருந்தால் மரணித்தவரின் நெருங்கிய உறவினர்களில் ஆணுக்குக் கொடுக்க வேண்டும்.

அவர்கள் பெண்களாக மட்டும் இருந்தால் (இருவராகவும் அல்லது) இருவருக்கு அதிகமாக இருந்தால் அவர் விட்டுச் சென்றதில் மூன்றில் இரண்டு பங்குண்டு. (4 : 11)

சொத்துக்களை உரிமையாளர்களுக்கு பங்கிட்டுக் கொடுங்கள். மிகுதியை அவரின் நெருங்கிய உறவினர்களில் ஆணுக்குக் கொடுங்கள். (ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

(உதாரணம் : தந்தை, தந்தை இல்லாவிடின் சகோதரன், சகோதரன் இல்லாவிடின் சாச்சா போன்றோர்.)

13. மரணித்தவருக்கு ஆண் பிள்ளைகளின்றி ஒரு பெண் பிள்ளை மட்டும் இருந்தால் அப்பிள்ளைக்கு அவரின் சொத்தில் பாதியைக் கொடுக்க வேண்டும். மீதிப் பாகத்தை அவரின் நெருங்கிய உறவினருக்குக் கொடுக்க வேண்டும்.

ஒரு பெண்ணிருந்தாலோ அவளுக்கு இரண்டில் ஒரு பங்குண்டு (4 : 11)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :

சொத்துக்களை உரியவர்களுக்குச் சேர்த்து வையுங்கள். அதில் ஏதும் மீதமிருந்தால், அது அவரின் உறவினர்களில் நெருங்கிய ஆணுக்குக் கொடுக்கப்படும். (ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

14. மரணித்தவர் தன் தாய் தந்தை பிள்ளைகளை விட்டுச் சென் றால் அவரின் தாய் தந்தை ஒவ்வொருவருக்கும் அவரின் சொத்திலிருந்து ஆறில் ஒன்று கொடுக்க வேண்டும். (உதாரணமாக 6 இலட் சம் பணமிருந்தால் தாய்க்கு ஒரு இலட்சம், தந்தைக்கு ஒரு இலட்சம்) மீதியை பிள்ளைகளுக்கு மத்தியில் பங்கிட வேண்டும்.

அவருக்குச் சந்ததியுமிருந்து அவருடைய தாய் தந்தை ஒவ்வொருவருக்கும் விட்டுச் சென்றதில் ஆறில் ஒரு பாகமுண்டு (4 : 11)

15. மரணித்தவர் பிள்ளைகளின்றி தாய் தந்தைகளை மட்டும் விட்டுச் சென் றால், அவரின் சொத்தில் மூன்றில் ஒன்றைத் தாய்க்கும் மிகுதியை தந்தைக்கும் கொடுக்க வேண்டும்.

அவருக்குச் சந்ததி இல்லாமலிருந்து, பெற்றோர் அவருக்கு அனந்தரக்காரர்களானால், அவருடைய தாய்க்கு மூன்றில் ஒரு பாகம்தான். (மீதி தகப்பனைச் சாரும்.) (4 : 11)

16. ஒரு பெண் மரணித்து அவளுக்குப் பிள்ளைகள் இல்லாது கணவன் மட்டுமிருந்தால் அவளின் சொத்தில் கணவனுக்கு இரண்டில் ஒன்று பங்கு கொடுக்கப்படும்.

உங்கள் மனைவிகளுக்குச் சந்ததி எதுவும் இல்லாவிட்டால் அவர்கள் விட்டுச் சென்றதில் உங்களுக்கு பாதியுண்டு. (4 : 12)

17. அவர்களுக்கு பிள்ளைகளிருப்பின் கணவனுக்கு அவளின் சொத்தில் நான்கில் ஒரு பாகம் கொடுக்கப்படும்.

அவர்களுக்கு சந்ததியிருந்தாலோ அவர்கள் விட்டுச்சென்றதில் உங்களுக்குக் கால் பாகந்தான் ($^1/_4$) உண்டு. (04 : 12)

18. ஒருவர் பிள்ளைகளில்லாது தனது மனைவியை மட்டும் விட்டுச் சென்றால் அவரின் சொத்தில் நான்கில் ஒரு பாகம் கொடுக்கப்படும்.

“உங்களுக்குச் சந்ததியில்லாத நிலையில் (நீங்கள் மரணித்து விட்டால், உங்கள் மனைவிகளாகிய) அவர்களுக்கு நீங்கள் விட்டுச் சென்ற சொத்தில் நான்கில் ஒரு பாகந்தான் உண்டு. (4 : 12)

19. மரணித்தவருக்குப் பிள்ளைகளில்லாது தாய், சகோதரர்கள், சகோதரிகள் மட்டுமிருந்தால் அவரின் சொத்தில் ஆறில் ஒரு பாகம் தாய்க்கு கொடுக்க வேண்டும்.

அவருக்கு சகோதரர்களுமிருந்தால், தாய்க்கு ஆறில் ஒரு பாகந்தான் உண்டு. (4 : 11)

20. மரணித்தவருக்குப் பிள்ளைகளும் மனைவியும் இருந்தால், மனைவிக்கு எட்டில் ஒரு பங்கு கொடுக்க வேண்டும். மிகுதியைப் பிள்ளைகளுக்குப் பங்கிட வேண்டும்.

உங்களுக்கு சந்ததி இருந்தாலோ நீங்கள் விட்டுச் சென்றதில் எட்டில் ஒரு பாகந்தான் அவர்களுக்குண்டு. (4 : 12)

21. மரணித்தவர் ஆணாகவோ, அல்லது பெண்ணாகவோ இருந்து அவர்களுக்குத் தந்தையோ, பிள்ளைகளோ இல்லாத நிலையில் சொத்துக்களும் இருந்து, அவர்களுக்கு சகோதர, சகோதரிகளும் இருந்தால் ஒவ்வொருவருக்கும் ஆறில் ஒரு பாகம் கொடுக்க வேண்டும். சகோதர, சகோதரி ஒன்றுக்கு மேலிருந்தால் சொத்தில் மூன்றில் ஒரு பகுதியை அவர்களுக்கு மத்தியில் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும்.

வாரிசுகள் இல்லாத ஒரு ஆணோ, அல்லது ஒரு பெண்ணோ, இறந்து, ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரி இருந்தால் அவர்களில் ஒவ்வொருவருக்கும் ஆறில் ஒரு பாகம் உண்டு. இதற்கு அதிகமாக இருந்தால் மூன்றில் ஒரு பாகத்தில் அவர்கள் சமமான பாகஸ்தர்கள். (4 : 12)

22. ஒருவர் மரணிக்கும் போது அவருக்கு யாருமே இல்லாது ஒரேயொரு கோதரி மட்டும் இருந்தால் அவருக்கு இரண்டில் ஒரு பங்கு கொடுக்க வேண்டும்.

சந்ததியில்லாத ஒரு மனிதன் இறந்து, அவனுக்கு ஒரு சகோதரி இருந்தால் அவளுக்கு அவன் விட்டுச் சென்றதில் இரண்டில் ஒரு பாகம் கிடைக்கும். (5 : 176)

23. மரணித்தவருக்கு இரண்டு சகோதரிகள் மட்டும் இருந்தால் மூன்றில் இரண்டு கொடுக்கப்படும்.

இரு பெண்கள் மட்டும் இருந்தால் அவர் விட்டுச் சென்றதில் மூன்றில் இரண்டு பாகத்தை இவ்விருவரும் அடைவர். (5 : 176)

24. ஒரு பெண் தனக்குத் தாய், தந்தை, பிள்ளைகள் எவருமில்லாது ஒரேயொரு சகோதரன் மட்டும் இருக்கையில் மரணித்து விட்டால், அவரின் முழுச் சொத்தும் அவருக்குரியதாகும்.

(ஒரு பெண் இறந்து) அவளுக்கு சந்ததி இல்லாமலிருந்தால், (தகப்பன் ஒன்றான ஒரேயொரு சகோதரன் மட்டும் இருந்தால்) அவள் விட்டுச் சென்ற யாவையும் அவன் அடைவான். (5 : 176)

25. மரணித்தவருக்கு மனைவியும் இரு ஆண் பிள்ளைகளும் இருப்பின் இரு பிள்ளைகளுக்கும் மூன்றில் இரண்டும், தாய்க்கு எட்டில் ஒன்றும் கொடுக்கப்படும்.

“ஸ.்.தின் இரு மகன்மார்களுக்கும் மூன்றில் இரண்டும், அவ்விருவரின் தாய்க்கு எட்டில் ஒன்றும் கொடுங்கள்” என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (அஹ்மத், அபூதாவூத், திர்மிதி - புலூக் )

26. மரணித்தவருக்கு தாய், தந்தை, பிள்ளைகள் இல்லாது சகோதர, சகோதரிகள் மட்டும் இருந்தால், பெண்ணின் பங்கைப் போல் இருமடங்கு ஆண்களுக்குக் கொடுக்கவும்.

ஆணும் பெண்ணும் சகோதரர்களாக இருந்தால், ஆணுக்கு பெண்ணுக்கு இருப்பதைப் போல் இரு பங்கு உண்டு. (5 :176)